SWOAD

# SOCIAL WELFARE ORGANIZATION AMPARA DISTRICT

## அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு.









# அரையாண்டு அறிக்கை - 2011
## (தை - ஆனி)

## உள்ளே........


01. அறிமுகம்.

02. தொலைநோக்கு / Vision

03. பணிநோக்கு / Mission

04. நோக்கம்:

05. இலக்குக் குழுக்கள் :

06. பணியாற்றும் பிரதேசங்கள்

07. பணியாளர்கள் விபரம்.

08. அங்கத்தவர்கள் விபரம்.

09. நிறுவனக் கட்டமைப்பு.

10. நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் பற்றிய விபரம்.



T.P :- 067/2277276

Fax :- 067/2278358

E.mail :- swoad@sltnet.lk

## 01. அறிமுகம்.

1990ம் ஆண்டிலும் அதன் பின்னரும் ஏற்பட்ட யுத்தத்தினாலும், வன்செயல்களினாலும், அரசின் இனஒதுக்கல்களினாலும் பௌதீக ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு பின்தங்கியிருந்த மக்களின் வாழ்வை மேம்படுத்தி அவர்கள் வாழ்விற்கு புத்தொளியூட்டப்பட வேண்டுமென்ற நன்நோக்கில் அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களை மையமாகக் கொண்டு **திரு.சன்முகம் செந்துராசா** அவர்களினால் **1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி** அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வமைப்பானது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய 7 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 58 கிராமக் கிளைகளில் மூவின மக்களினையும் உள்ளிணைத்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

செயற்பாட்டு வழிமூலங்களாக 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 6 பிரதேச காரியாலயங்களையும், 58 கிராமக் கிளை அலுவலகங்களையும், அக்கரைப்பற்றில் தலைமைக் காரியாலயத்தினையும் கொண்டு, 6780 அங்கத்தவர்களையும், 96 பணியாளர்களையும் இணைத்த வகையில் **ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா** அவர்களின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் கண்காணித்து வழிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

"மக்களே எங்கள் பலமாகும்"



## 02. தொலைநோக்கு / Vision

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை அடையும் பொருட்டு சேவைகளையும் சமமான வாய்ப்புக்களையும் வழங்கும் மீயுயர் நிறுவனம்.

## 03. பணிநோக்கு / Mission

விளைவுகள் அடிப்படையிலான வினைத்திறன் உள்ள சேவைகளை நலிவுற்ற மக்களுக்கு வழங்கும் முற்போக்கு எண்ணமுள்ள உதவுவோரையும், ஆக்கத்திறனும் மற்றவரை ஊக்குவிக்கும் திறனுள்ள பணியாளரையும் கொண்ட அமைப்பு.

## 04. நோக்கம் :

1. நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும், வறுமையை தணித்தலும்.
2. பாதிக்கப்பட்ட பெண் தலைமைதாங்கும் குடும்பங்களினது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்.
3. ஜனநாயக சமூகத்தில் மக்களின் பங்குபற்றுதலை விருத்தி செய்வதும், அதனை மேம்படுத்தலும்.
4. அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு தன்னிறைவான வாழ்க்கையினைப் பெறுவதற்கு வழிகாட்டல்.
5. உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவதற்கு வழிகாட்டல்.
6. வறிய மாணவர்களுக்கான கல்வி வசதிகளையும், வாய்ப்புக்களையும் வழங்குதல்.
7. சமூக நல்லுறவு மற்றும் இனங்களிடையிலான சமாதான நல்லுறவை ஏற்படுத்தல்.

## 05.இலக்குக் குழுக்கள் :



1. பெண்கள்.
2. சிறுவர்கள்.
3. முதியோர்கள்.
4. இளைஞர்கள்.
5. பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள்.
6. வறிய மாணவர்கள்.
7. மிகவும் வறிய குடும்பங்கள்.
8. பாதிக்கப்பட்ட மக்கள்.





## 06. பணியாற்றும் பிரதேசங்களும், கிராமங்களும்.

| இல | பிரதேசம் | கிராமம் |
|---|---|---|
| 01 | பொத்துவில் | கோமாரி–01, கோமாரி– 02, ஊறணி, ஏத்தம், குண்டுமடு, வட்டிவெளி, R.M. நகர், ஹிதாயாபுரம், உல்லை |
| 02 | திருக்கோவில் | தம்பிலுவில்- 01, தம்பிலுவில்- 02, தம்பிலுவில்- 03, தம்பட்டை, முனையூர், திருக்கோவில் -01, திருக்கோவில் -02, கஞ்சிகுடியாறு, தங்கவேலாயுதபுரம், சாகாமம், விநாயகபுரம்-01, விநாயகபுரம்-02, விநாயகபுரம்-03, விநாயகபுரம்-04, தாண்டியடி, காயத்திரிகிராமம் -01,02 |
| 03 | காரைதீவு | காரைதீவு– 01, காரைதீவு– 02, காரைதீவு– 03, காரைதீவு– 04, காரைதீவு– 05 |
| 04 | கல்முனை | கல்முனை– 01, கல்முனை-02, நற்பட்டிமுனை-01, நற்பட்டிமுனை-02, துரவந்தியமேடு சேனைக்குடியிருப்பு-01, சேனைக்குடியிருப்பு-02, பாண்டிருப்பு, பெரியநீலாவனை, |
| 05 | சம்மாந்துறை | வீரமுனை, மட்தரவை, சொரிக்கல்முனை, வளத்தாப்பிட்டி, மல்வத்தை– 01, மல்வத்தை– 02 |
| 06 | நாவிதன்வெளி | 12ம் கிராமம், வேப்பயடி, 11-2 கிராமம், 4ம் கிராமம், சவளக்கடை, 11-3 கிராமம், நாவிதன்வெளி, 13ம் கிராமம், 15ம் கிராமம், 9ம் கிராமம் |
| 07 | உகண | விஜயபுர, சியம்பலாவ |


## 07. பணியாளர்கள் விபரம்.

| இல | பணியாளர் | ஆண் | பெண் | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட மட்டம் | 24 | 14 | 38 |
| 2 | பிரதேச மட்டம் | 06 | 07 | 13 |
| 3 | கிராம மட்டம் | 0 | 17 | 17 |
| 4 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 0 | 28 | 28 |
| | **மொத்தம்.** | **30** | **66** | **96** |

## 08. அங்கத்தவர்கள் விபரம்.

| இல | பிரதேசம் | அங்கத்தவர் எ-கை |
|---|---|---|
| 1 | பொத்துவில் | 874 |
| 2 | திருக்கோவில் | 1989 |
| 3 | காரைதீவு | 593 |
| 4 | கல்முனை | 1284 |
| 5 | சம்மாந்துறை | 809 |
| 6 | நாவிதன்வெளி | 1231 |
| | **மொத்தம்.** | **6780** |

## 09. நிறுவனக் கட்டமைப்பு.



# நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்.

## 01. வாழ்வாதார திட்டம்.

### வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கான கடன் உதவி வழங்கல்.

- நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக, மக்களை சுயதொழிலில் ஊக்குவித்து அவர்களின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் தன்னிறைவான மக்கள் சமூகத்தினை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, திருக்கோவில், பொத்துவில் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 990 பயனாளிகளிக்கு 38,322,000.00 ரூபா நிதியானது சேமிப்புக் கடன் திட்டத்தின் கீழ் வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.




### தொழில்களை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட கடன் விபரங்கள்.

| தொழில் | கல்முனை | | காரைதீவு | | பொத்துவில் | | திருக்கோவில் | | சம்மாந்துறை | | நாவிதன்வெளி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பயனாளி எ-கை | வழங்கப்பட்ட கடன் தொகை | பயனாளி எ-கை | வழங்கப்பட்ட கடன் தொகை | பயனாளி எ-கை | வழங்கப்பட்ட கடன் தொகை | பயனாளி எ-கை | வழங்கப்பட்ட கடன் தொகை | பயனாளி எ-கை | வழங்கப்பட்ட கடன் தொகை | பயனாளி எ-கை | வழங்கப்பட்ட கடன் தொகை |
| விவசாயம் | 02 | 120000 | 1 | 50000 | | | 23 | 790000 | 61 | 2,157,000 | 121 | 5590000 |
| வியாபாரம் | 08 | 645000 | | | 19 | 783000 | 1 | 250000 | 11 | 325,000 | 6 | 460000 |
| சிறு வியாபாரம் | 63 | 2460000 | 20 | 750000 | 07 | 240000 | 80 | 3888000 | 14 | 417,000 | 12 | 450000 |
| வீட்டுத்தோட்டம் | 07 | 275000 | | | 13 | 393000 | 45 | 1190000 | 02 | 70,000 | 5 | 255000 |
| தையல் | 17 | 510000 | 6 | 310000 | 01 | 50000 | 12 | 348000 | 05 | 130,000 | 1 | 25000 |
| நெல் குற்றல் | 49 | 2303000 | 4 | 80000 | 01 | 65000 | 0 | 0 | 10 | 288,000 | 3 | 87000 |
| மீன்பிடி | 06 | 355000 | | | | | 23 | 749000 | | | 1 | 50000 |
| தச்சுத்தொழில் | 13 | 735000 | 3 | 70000 | | | 6 | 325000 | 02 | 90,000 | - | - |
| கோழிவளர்ப்பு | 22 | 773000 | 21 | 650000 | 35 | 952000 | 66 | 1708000 | 40 | 1,018,000 | 9 | 290000 |
| மாடு வளர்ப்பு | 0 | 0 | 12 | 540000 | 04 | 240000 | 16 | 700000 | 05 | 180,000 | 26 | 1407000 |
| ஆடு வளர்ப்பு | 03 | 185000 | 1 | 10000 | 01 | 30000 | 4 | 130000 | 04 | 105,000 | 6 | 183000 |
| வைசிக்கிள் | | | | | | | 1 | 100000 | | | | |
| கல் வெட்டுதல் | | | | | 19 | 660000 | 1 | 15000 | | | - | - |
| சிறுகைத்தொழில் | | | | | | | | | 10 | 318,000 | | |
| மொத்தம் | 190 | 8361000 | 68 | 2460000 | 100 | 3413000 | 278 | 10193000 | 164 | 5098000 | 190 | 8797000 |

**வாழ்வாதார திட்டத்திற்குத்தேவையான பயிற்சிகளை வழங்குதல்.**

- வாழ்வாதாரத்திட்டத்தின் கீழ் திருக்கோவில் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 144 விவசாயிகளை உள்ளிணைத்து அடிப்படை நிதி முகாமைத்துவம், சேமிப்பு நடவடிக்கைகள், வங்கிச் சேவைத்திட்ட நடைமுறைகள், மற்றும் வங்கியினுடாக பெற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக ஹற்றன் நசனல் வங்கி முகாமையாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்களைக் கொண்டும், இலங்கை வங்கி முகாமையாளர் திரு.ஜெயந்திரா அவர்களைக் கொண்டும் 04 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சிக் கருத்தரங்கின் ஊடாக இவ்விவசாய உற்பத்தியாளர்கள் நிதி முகாமைத்துவம் தொடர்பான அடிப்படை அறிவினையும், வங்கிச் சேவைகள், மற்றும் கடன் பெறும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வையும் பெற்றுள்ளார்கள்.




## 02. வெள்ள அனர்த்த அவசரகால செயல் திட்டம்.

- வெள்ள அனர்த்த அவசரகால செயல்திட்ட செயற்பாட்டின் கீழ் ZOAஅமைப்பின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 1050 குடும்பங்களுக்கு உணவு அல்லாத பொருட்களும் (Non food relief items), இப்பிரதேசத்தில் தெரிவு செய்யப் பட்ட 10 பாடசாலைகளுக்கு பாடசாலையை சுத்தம் செய்வதற்கான பொருட்களும் (School Cleaning tools) வழங்கப்பட்டுள்ளன.






⚜ வெள்ள அனர்த்த அவசரகால செயற்திட்டத்தின் கீழ் Oxfam அமைப்பின் நிதி உதவியுடன் ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 650 குடும்பங்களுக்கு உணவு அல்லாத பொருட்களும், 2419 குடும்பங்களுக்கு உடல் சுகாதார மேம்பாட்டிற்கான பொதிகளும், 1037 குடும்பங்களுக்கு தண்ணீர் வடிகட்டி பாத்திரமும் இப்பிரதேச செயலகங்களின் ஊடாக கிராம சேவையாளர் தலைமையில் வழங்கப்பட்டுள்ளன.







⚜ வெள்ள அனர்த்த அவசரகால செயற்திட்டத்தின் கீழ் சுவாட் அமைப்பின் ரூபாய் 88,423.00 நிதி ஒதுக்கீட்டில் திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 62 குடும்பங்களுக்கு 124 பால்மா பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், திருக்கோவில், சம்மாந்துறை ஆகிய இரு பிரதேசங்களிலும் முகாமில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு உணவும் வழங்கப்பட்டுள்ளது.







- ⚜ திருக்கோவில், பொத்துவில் ஆகிய இருபிரதேசங்களிலும் வெள்ளத்தினால் பாதிப்புக்குட்பட்ட 496 கிணறுகள் துப்பரவு செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், 3052 கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டுள்ளது.





- ⚜ வெள்ள அனர்த்தகால திண்மக்கழிவகற்றல் செயல் திட்டத்தின் கீழ் Oxfam அமைப்பின் நிதி உதவியுடன் 30,600.00 ரூபாய் செலவில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோளாவில் - 01,02,03, நாவற்காடு, ஆலையடிவேம்பு, சின்னக்குளம், பெரியகுளம், வாச்சிக்குடா, இத்தியடி, தீவுக்காலை, பனங்காடு ஆகிய G.S பிரிவுகளில் வீதிகள் தோறும் தேங்கியிருந்த திண்மக்கழிவுகளானது ஆலையடிவேம்பு பிரதேச சபையினூடாக அகற்றி சுத்தம் செய்து கொடுக்கப்பட்டது.





- ⚜ வெள்ளத்தினால் ஏற்படக்கூடிய உடல் சுகாதார பாதிப்புக்கள் தொடர்பாகவும், நீர் முகாமைத்துவம் தொடர்பாகவும் பொது சுகாதார திணைக்கள அதிகாரி திரு.K.குணபாலசிங்கம் அவர்களைக் கொண்டு திருக்கோவில் பிரதேச கிராம மக்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கில் 300 குடும்பங்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

## சிறு கைத்தொழில் முயற்சிக்கான நிதி உதவி வழங்கல்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் CA அமைப்பின் அனுசரணையுடன் கல்முனை பிரதேசத்தில் இருந்து வீட்டுத் தோட்டத்திற்காக 50 பயனாளிகளும், மட்பாண்ட கைத்தொழிலுக்காக 15 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டு, இவர்களுக்கு திட்ட நோக்கம், திட்ட அமுலாக்கல் தொடர்பாக கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்தப்பட்டு தொழிலுக்கான உதவித் தொகையாக 400,000.00 ரூபாய் நிதியானது திட்ட உத்தியோகத்தர் அவர்களின் தலைமையில் இப்பிரதேச செயலாளர் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மானியம் வழங்கப்பட்ட பயனாளிகள் அனைவரும் உரிய மரக்கறிவிதைகளை நட்டு தற்போது இதனை பாராமரித்துவருகின்றனர். இப் பயிர்கள் தற்போது பூ, காய் பருவம், அறுபடைப்பருவம் என பலதரப்பட்ட நிலையில் காணப்படுவதுடன், மட்பாண்ட கைத்தொழிலையும் உரியமுறையில் மேற்கொண்டும் வருகின்றனர்.







## தற்காலிக கொட்டில் அமைத்துக் கொடுத்தல்.





வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் CA அமைப்பின் அனுசரணையுடன் தற்காலிக கொட்டில் அமைத்துக் கொடுப்பதற்கான பொருள் உதவி வழங்கும் பொருட்டு ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து 24 பேரும், கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து 42 பேரும் பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு திட்ட நோக்கம், திட்ட அமுலாக்கல் தொடர்பாகவும் விரிவுரையாக்கக் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டு இத்திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டதுடன், இப்பயனாளிகளுக்கு வீட்டின் திருத்த வேலைகளுக்குத் தேவையான பொருட்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டு தற்போது கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு

## 03. விவசாய பெறுமதிசேர் மேம்பாட்டு செயல் திட்டம்.

- அம்பாரை மாவட்டத்திலிருந்து ஆய்வின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாவிதன்வெளி, உகண, சம்மாந்துறை, பொத்துவில், ஆலையடிவேம்பு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள விவசாய சங்கங்களை வலுப்படுத்தி, விவசாயிகளின் அறிவு, திறன் மற்றும் தொழில் நுட்பத்தினை விருத்தி செய்வதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து பொருளாதார மேம்பாட்டை அடையும் பொருட்டு லுத்தரன் உலக நிவாரண (LWR) அமைப்பின் நிதி உதவியுடன் இச்செயற்திட்டம் அமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

### District level Orientation Meeting

- இத்திட்ட அமுல்படுத்தல் தொடர்பான மாவட்டமட்ட விரிவுரையாக்கக் கலந்துரையாடலானது 12.05.2011ம் திகதி அம்பாறை, மாவட்ட அரச அதிபர் காரியாலயத்தில், திரு.சுனில்கன்னங்கரா(GA) அவர்களின் தலைமையில் அமைப்பினால் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர், விவசாய திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், இத்திட்டச் செயற்பாட்டுப் பிரதேச செயலாளர்கள், வர்த்தக சங்கம், மாவட்ட திட்டமிடல் அலுவலர்கள், கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. தட்சணாமூர்த்தி ஆகியோர் உட்பட 30பேர் கலந்துகொண்டனர்.





### Divisional level Orientation Meeting.

- இத்திட்ட அமுல்படுத்தல் தொடர்பான பிரதேசமட்ட விரிவுரையாக்கக் கலந்துரையாடலானது தெரிவு செய்யப்பட்ட நாவிதன்வெளி, உகண, சம்மாந்துறை, பொத்துவில், ஆலையடிவேம்பு ஆகிய 5பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர், கிராம சேவகர், சமூர்த்தி உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர்கள், விவசாயசங்கத் தலைவர்கள், பெரும்பாக உத்தியோகத்தர், RDS, பிரதேச சபை உறுப்பினர்கள், நில அளவையாளர் உற்பட 116பேர் கலந்து கொண்டு இத்திட்டச் செயற்பாடு பற்றிய தெளிவினைப் பெற்றுள்ளனர்.





**Village level Orientation Meeting.**

- இத்திட்ட அமுல்படுத்தல் தொடர்பான கிளை ரீதியான விரிவுரையாக்கக் கலந்துரையாடலானது நாவிதன்வெளி, உகண, சம்மாந்துறை, பொத்துவில், ஆலையடிவேம்பு ஆகிய 5பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 17 கிராமக் கிளைகளிலுமுள்ள விவசாய சங்கங்களிலும், விவசாய திணைக்களங்களிலும் நடாத்தப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் கிராம சேவகர், விவசாய போதனாசிரியர்கள், விவசாய சங்கத் தலைவர்கள், பெரும்பாக உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், RDS உட்பட 1611 பேர் கலந்துகொண்டனர்.




LWR திட்ட County Director னால் இத்திட்டம் தொடர்பான கள விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.






## 04. தொழில் பயிற்சி வழங்கல்.

- மேற்படிப்பினை தொடரமுடியாத நிலையில் பாதிக்கப்பட்டு வறுமை நிலையிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியினை வழங்குவதன் ஊடாக தொழில் வாய்ப்பிற்கான வழிகாட்டல் வழங்குவதை நோக்காக் கொண்டு ODW/UNICEF ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்பயிற்சிகள் அமைப்பினால் நடாத்தப்பட்டு வருகின்றன. இத்தொழில் பயிற்சியின் மூலம் 105 இளையோர்கள் பயன்பெறுகின்றனர்.

**தொழில் பயிற்சி பற்றிய விபரங்கள்.**

| இல | தொழில் பயிற்சி விபரம் | பிரதேசம் | பயிலுனர் எண்ணிக்கை விபரம். | | | நிதி நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | மொத்தம் | |
| 01 | குளிரூட்டி திருத்துனர் பயிற்சி. | ஆலையடிவேம்பு | 20 | .... | 20 | ODW |
| 02 | அழகுக்கலைப் பயிற்சி | ஆலையடிவேம்பு | .... | 20 | 20 | |
| 03 | மின்னினைப்பு பயிற்சி | கல்முனை | 15 | 0 | 15 | |
| 04 | சாரதிக்கான பயிற்சி | திருக்கோவில் | 24 | 01 | 25 | UNICEF |
| 05 | தையல் பயிற்சி | திருக்கோவில் | ..... | 25 | 25 | |
| **மொத்தம்.** | | | **59** | **46** | **105** | |

### 01. சாரதிப் பயிற்சி :-

- இப்பயிற்சியானது தெரிவு நிபந்தனையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 25 மாணவர்களைக் கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றது. இப்பயிற்சிநெறி மாணவர்களுக்கு Lloyds Driving School Card வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் உரிய நேரங்களில் தவறாது சமூகமளித்து இப்பயிற்சியினை மேற்கொள்வதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர். இம்மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக ஒருவருக்கு 666.64 ரூபாய் வீதம் 25 மாணவர்களுக்கும் 16,666.00 ரூபாய் நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

## 02. தையல் பயிற்சி :-

- தையல் பயிற்சிநெறியானது தெரிவு நிபந்தனையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 25 மாணவர்களைக்கொண்டு தம்பட்டை பயிற்சிநிலையத்தில் நடாத்தப்பட்டு வருகிறது. ஆசிரியரின் வேண்டுகோளுக்கினங்க பாதீட்டின் அடிப்படையில் மாதாந்தம் இப்பயிற்சிக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதுடன், இப்பயிற்சிநெறியின் பாடவிதானங்களுக்கு அமைவாக தையல் முறைகளும் பயிற்றுவிக்கப்படுகின்றது. இம்மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக ஒருவருக்கு 1250.00 ரூபாய் வீதம் 25மாணவர்களுக்கும் 31,250.00 ரூபாய் நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

## 03. அழகுக்கலை பயிற்சி :-

- இப்பயிற்சிக்காக 20மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு தற்போது அவர்களுக்கான பயிற்சிகள் நடாத்தப்பட்டு வருவதுடன், இவர்களின் மொழியறிவினை விருத்தி செய்யும் நோக்கில் ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு பாடங்களுக்கான வகுப்புக்களும் நடாத்தப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக ஒருவருக்கு 2000.00 ரூபாய் வீதம் 20மாணவர்களுக்கும் 40,000.00 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

## 04. குளிரூட்டி திருத்துனர் பயிற்சி :-

- இப்பயிற்சிக்காக 20மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கான பயிற்சியானது அக்கரைப்பற்று சவாட் தலைமையலுவலக பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டு வருவதுடன், இவர்களின் மொழியறிவினை விருத்தி செய்யும் நோக்கில் ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு பாடங்களுக்கான வகுப்புக்களும் நடாத்தப்பட்டு வருகின்றது.

- இப்பயிற்சி மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக ஒருவருக்கு 2000.00 ரூபாய் வீதம் 20மாணவர்களுக்கும் 40,000.00 ரூபாய் வழங்கப்பட்டுள்ளதுடன், OJT மாணவர்கள் 18பேருக்கு 24,300.00 ரூபாயும் வழங்கப்பட்டு வருகின்றது.





## 05. மின்னிணைப்பு பயிற்சிநெறி :-

- இப்பயிற்சிக்காக 15மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கான பயிற்சியானது கல்முனை சுவாட் பிரதேச அலுவலக பயிற்சிநிலையத்தில் நடாத்தப்பட்டு வருவதுடன், இவர்களின் மொழியறிவினை விருத்தி செய்யும் நோக்கில் ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு பாடங்களுக்கான வகுப்புக்களும் நடாத்தப்பட்டு வருகின்றது.

- இப்பயிற்சி மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக 15மாணவர்களுக்கும் 30,000.00 ரூபாய் வழங்கப்பட்டு வருவதுடன், OJT மாணவர்கள் 19பேருக்கு 25,650.00 ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.





**தொழில் வழிகாட்டல், மேலதிகப் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகளை நடாத்தல்.**

- இத்தொழில்பயிற்சி மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் தொடர்பாக வளவாளர் திரு.ALM.ரபிக் அவர்களைக் கொண்டு பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், நிந்தவூர் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் மின்னினைப்பு பயிற்சிநெறி மாணவர்கள் 36 பேருக்கு மேலதிக பாதுகாப்புப் தொடர்பாக இருநாள் பயிற்சிகளும் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.

**தொழில் பயிற்சி மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்களை நடாத்தல்.**

- பயிற்சிநெறி மாணவர்களின் பெற்றோர்களுக்கான கூட்டமானது திட்ட உத்தியோகத்தர் S.புண்ணியமூர்த்தி அவர்களினால் நடாத்தப்பட்டது. இக்கூட்டகலந்துரையாடலின்போது இத்திட்டச் செயற்பாடுகள் குறித்தும், பெற்றோரின் பங்களிப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது, இவ் 02 கலந்துரையாடல்களிலும் பயிலுனர்களும், பெற்றோர்களும் உட்பட 77 பேர் கலந்து கொண்டுள்ளனர்.





## தொழில் வாய்ப்புக்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

- தொழில் பயிற்சி நெறியினை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பிற்கான வழிகாட்டல் வழங்குவதை நோக்காகக் கொண்டு வங்கி முகாமையாளர்களை அழைத்து வங்கிக் கடன் உதவித் திட்டம் தொடர்பான நடைமுறைகள் குறித்து 24.05.2011ம் திகதி சுவாட் தலைமையலுவலக பயிற்சி மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.





- தொழில் பயிற்சியினை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களை தொழில் வழங்குனர்களிடம் இணைத்துவிடும் நோக்கில் WUSC அமைப்பின் நிதி உதவியுடன் அமைப்பினால் தொழில் வழிகாட்டல் பயிற்சிநிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. Employment Officer இற்கான நேர்முகத் தெரிவானது 25.05.2011ம் திகதி நடாத்தப்பட்டது இதற்கான பணியாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## பயிலுனர்களுக்கான சான்றிதழ், மற்றும் தொழில் உபகரணங்கள் வழங்குதல்.

- தாம் பெற்றுக்கொண்ட பயிற்சி நெறியின் மூலம் தொழில் செய்து வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளும் வகையில், 2010ம் ஆண்டு தொழிற்பயிற்சிநெறியை முடித்துக்கொண்ட மாணவர்கள் 68 பேருக்கு NVQ சான்றிதழும், தொழிலை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.






## 05. சமூக மட்டத்திலமைந்த இளைஞர்களின் நிலைமாற்றல் செயல் திட்டம்.

- அம்பாறை மாவட்டத்தில் யுத்தசூழல், அனர்த்தங்களின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளை இலக்காகக் கொண்டு, இவ் இளையோர்களுக்கு வாழ்க்கை தொடர்பான உள்ளுணர்வினை ஏற்படுத்தி, சமூகத்துடன் மீள இணைவதற்கும், கல்வி, பொருளாதாரத்தில் மேம்பாட்டை அடையும் பொருட்டும், தொழில் திறனை விருத்தி செய்து வாழ்க்கைத் தெரிவுகளை திட்டமிட்டு செயற்படுத்தக்கூடிய வகையில் இளைஞர்களிடையே நிலைமாற்றத்தினை ஏற்படுத்தும் பொருட்டு இச்செயல் திட்டமானது WUSC/UNICEF அமைப்புக்களின் உதவியுடன் அமைப்பினால் செயற்படுத்தப்படுகிறது.

- இச்செயற்பாட்டின் கீழ் 226 இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு, இவர்களை 9 குழுக்களாகப் பிரித்து கீழ் வரும் தலைப்புகளில் பல வளவாளர்களைக் கொண்டு பயிற்சிகள் நடாத்தப்பட்டதன் விளைவாக இவ் இளைஞர் யுவதிகள், தொழில் தொடர்பான திறனை விருத்தி செய்து வாழ்க்கைத்தெரிவுகளை திட்டமிட்டு செயற்படுத்தக்கூடிய வகையில் நிலைமாற்றத்தினை ஏய்துள்ளனர்.



01. வாழ்க்கைத் தேர்ச்சி.
02. ஆளுமை அபிவிருத்தியும், தலைமைத்துவமும்.
03. குழுக்கள், அணிகள் உருவாக்கம்.
04. சமூக உளநலம்.
05. முயற்சியாண்மை அபிவிருத்தி.
06. தொழில் வழிகாட்டல்.
07. பால்நிலை அபிவிருத்தி.
08. கட்டிளம் பருவம், மகப்பேற்றுச் சுகாதாரம்,
09. போரினாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக, உளநலம்
10. முரண்பாடும் அதற்கான தீர்வுகளும்.
11. மாற்றமும் அதனை ஏற்றலும்.
12. இளைஞர்கள் எதிர்கொள்ளுகின்ற சமூகப்பிரச்சனைகள் (போதைப்பொருள், மதுபானம் என்பவற்றுக்கு அடிமைப்படுதலும் தவிர்ப்பும்.)





⚜ இச்செயற்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட இளைஞர், யுவதிகள் அனைவரினது மீள் ஒருங்கிணைப்பு நிகழ்வானது அவர்களின் கருத்துப்பரிமாறல்கள், அனுபவப் பகிர்வுகளுடன் 2011/06/05,06ம் திகதி தம்பட்டை சுவாட் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. இன் நிகழ்வினை சிறப்பிற்கும் முகமாக இளைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டதுடன், இதில் WUSC UNICEF, ILO, Save the children பிரதிநிதிகளும், அரச சார்பற்ற ஏனைய அமைப்புக்களின் பிரதிநிதிகளும், இப்பயிற்சியினை நடாத்திய வளவாளர்களும் கலந்து இந்நிகழ்வினை சிறப்பித்துள்ளனர்.




⚜ இச் செயற்பாட்டின் ஊடாக சமூகத்துடன் இணைக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் தற்போது பாலர் பாடசாலைகளில் தொண்டர்களாகவும், MOH அலுவலகத்தில் தொண்டர்ககளாகவும், தங்களது பிரதேசங்களில் வசதி குறைந்த வறிய மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புக்களை நடாத்தும் பணியிலும், ஆடைத் தொழில்சாலை, communication, Computer center, Baby care கடைகளில் வேலை செய்தும், சிறுவர் கழகம் அமைத்து அதனை செயற்படுத்தியும், சுவாட் அமைப்பினால் நடாத்தப்படுகின்ற தொழில் பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சியினை பயின்றும் வருகின்றனர்.

⚜ இளையோர் நிலைமாற்றல் செயல்திட்டத்தினால் சமூகமட்ட இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ளமாற்றங்கள் குறித்த ஆய்வினை மேற்கொள்வதற்காக 11.05.2011ம் திகதி கொழும்பு WUSC தலைமை அலுவலகத்திலிருந்து Gender Officer வருகைதந்து Video Document மூலம் தகவல்களை பெற்றுள்ளார்.



## 06. சிறுவர் அபிவிருத்தித் திட்டம்.

சிறுவர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் 21 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாலர் பாடசாலைகளில் 28 ஆசிரியர்கள் கற்பித்து வருவதுடன் 726 சிறார்கள் கல்விகற்றும் வருகின்றனர்.

**பாலர் பாடசாலை பற்றிய விபரம்.**

| இல | பிரதேசம் | பாடசாலைகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1 | பொத்துவில் | 01 | 32 | 02 |
| 2 | திருக்கோவில் | 09 | 327 | 12 |
| 3 | காரைதீவு | 01 | 22 | 02 |
| 4 | கல்முனை | 01 | 38 | 02 |
| 5 | சம்மாந்துறை | 01 | 47 | 02 |
| 6 | நாவிதன்வெளி | 08 | 260 | 10 |
| | மொத்தம் | 21 | 726 | 30 |

**பாலர் பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகளாக கீழ் வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.**

- கதை கூறல்.
- படங்களை வெட்டி ஒட்டல்.
- சூழலிலுள்ள பொருட்களைக் கொண்டு செயற்பாடுகளை செய்து காட்டல்.
- அபிநயப் பாடல்கள்.
- சமய நிகழ்வுகளில் ஈடுபடுத்தல்.
- நிறம் தீட்டுதல்.
- கணித எண்ணக்கரு சம்பந்தமான குழுச் செயற்பாடுகள்
- மாதங்களைச் சொல்லுதல் (தமிழ். ஆங்கிலத்தில்)
- எழுத்துக்களை இனங்காணல்.
- பூக்கள் தெரிவு செய்தல்.
- களியால் உருவங்கள் அமைத்தல்.
- ஆக்கத்திறன் மூலம் தசை நார் பயிற்சியும் எழுதுவதற்கான முன்னாயத்தமும் ஏற்படுத்துதல்.
- சுவாச திறன் பயிற்சிகளை வழங்கல்.





**பெற்றோர் நிர்வாகத்திற்கான மாதாந்த ஒன்றுகூடல் நடாத்தல்:-**

- மாணவர்களின் கல்வி முன்னேற்றங்கள், குறைபாடுகள் குறித்தும், கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு தொடர்பாகவும் மாதாந்தம் பெற்றார் நிர்வாக்கூட்டம் அமைப்பினால் நடாத்தப்பட்டு கல்வி மேம்பாடு குறித்து பல தீர்மானங்களை மேற்கொண்டு அவற்றினை அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இப் பெற்றார் நிர்வாகத்தினால் மாணவர்களுக்கான மதிய உணவு மற்றும் நிகழ்வுகளுக்கான பங்களிப்பு, சிரமதான நடவடிக்கைகள் போன்ற பொதுச்செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பாலர் பாடசாலை மாணவர்களின் நுழைவுப்பணமானது அப்பாலர் பாடசாலையின் பெயரில் சேமிப்புக் கணக்கு திறக்கப்பட்டு வைப்பிலிடுவதென தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் தற்போது இவற்றுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றுக்கு பெற்றார் நிர்வாகத்தின் தலைவர், பாலர் பாடசாலை ஆசிரியர், பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் பொறுப்பாக நியமிக்கப்பட்டு தலைமையகத்தினால் கண்காணிப்பதற்கான வழிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

- குறித்த கணக்கில் வைப்பிலிடப்படும் பணமானது பாலா் பாடசாலை அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும். மாதாந்தம் பெற்றார் கூட்டத்தில் பாலா் பாடசாலைத் தேவை முன்வைக்கப்படுமிடத்து அவ்விடயம் அன்றைய நாள் கூட்டக் குறிப்பில் குறிப்பிடப்படுவதோடு சபையினரின் ஏகமனதான தீர்மானத்திற்கமைவாக நிர்வாகசபைக்கு எழுத்து மூலமான விண்ணப்பம் வழங்கப்பட்டு, தேவை முன்னுரிமைப்படுத்தப்படுவதன் அடிப்படையில் பணம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் நடாத்தல்.**

- பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையினை மேம்படுத்தும் திறன் மேம்பாட்டுப் பணிப்பாளர் திருமதி. சுகிர்தினி கௌரிஸ்வரன் அவர்களின் தலைமையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல்கள் 04 நடாத்தப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலின்போது ஆசிரியர்களினால் எதிர் நோக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்தும், தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் வழங்கப்பட்டுவருகின்றன.





- ⚜ பாலர் பாடசாலைகளை நடாத்துவதில் எதிர்நோக்கும் நடைமுறைப்பிரச்சினைகள் குறித்து தீர்மானங்களை மேற்கொள்ளும் நோக்கில் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் K.பிறேமலதன் அவர்களினால் 21.01.2011ம் திகதி விசேட கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உட்பட 29பேர் கலந்துகொண்டு பிரதேச, கிராம மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறித்தும், பாலர் பாடசாலைகளை நடாத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் வழங்கப்பட்டது.




**07. முரண்பாட்டினால் பாதிப்புற்று இடம்பெயர்ந்து மீள குடியமர்த்தப்பட்டோருக்கான சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்.**

- ⚜ அம்பாரை மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்ட கரையோரப் பிரதேசத்தில்வாழும் மக்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் கஞ்சிகுடியாறு, தங்கவேலாயுதபுரம் கிராமம் தொடர்பான அடிப்படைத் தகவல்கள் குறித்து DS Office, Oxfam அமைப்பு இணைந்து மதிப்பீடு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. இம்மதிப்பீடு தொடர்பான ஆவணங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 175பேர் பங்குபற்றியுள்ளனர்.

- ⚜ வர்த்தக சம்மேளணத்தினூடாக 115 விவசாயிகளுக்கு வங்கி சேவைத்திட்டம், விவசாய காப்புறுதி தொடர்பான விழிப்புணர்வினையும், வங்கிகளின் ஊடாக நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கான தொடர்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், தங்கவேலாயுதபுர கிராமத்தில் கடந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 29 விவசாயிகளுக்கு 541,000.00 ரூபாய் விவசாயக் காப்புறுதிப் பணமாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

- ⚜ சிறு வியாபாரம், விவசாயப் பயிர்ச் செய்கைக்காக தங்கவேலாயுதபுர கிராமத்தில் 15 விவசாயிகள் ஹற்றன் நெசனல் வங்கியில் (HNB) கடனுக்கு விண்ணப்பித்து கடன் உதவியினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

- வினாயகபுரம்-03,04 கிராமக் கிளைகளில் 32 விவசாயிகளுக்கு மரக்கறி விதையினங்களும், 100 விவசாயிகளுக்கு விதைநெல்லும் FAO அமைப்பின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

- வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சாகாமத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 18 குடும்பங்களில் சேவாலங்கா அமைப்பினுடாக ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது.

## 07. கொள்திறன் மேம்பாட்டு செயற்திட்டம்.

அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களுக்குட்பட்ட ஒரே கிராமத்தில் வசிக்கும் ஒத்த கருத்தினைக் கொண்ட அங்கத்தவர்கள் குழுக்களாக இணைந்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றனர். இவர்களிடையே ஒற்றுமை மனப்பாங்கை உருவாக்கி அக்குழுவிலுள்ள அங்கத்தவரது குடும்ப முன்னேற்றத்திற்கும் கிராம, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிகாட்டும் வகையில் அக்குழு உறுப்பினர்களது கொள்திறனை விருத்தி செய்வதை மையமாகக் கொண்டு அமைப்பில் கொள்திறன் மேம்பாட்டு செயற்திட்டப் பிரிவு செயற்பட்டுக் கொண்டு வருகிறது.

10 – 20 அங்கத்தவரை கொண்டியங்கும் இக்குழுக்களில் தலைவி, செயலாளர், பொருலாளர் உட்பட 7 பேரைக் கொண்ட நிர்வாகம் செயற்பட்டுக் கொண்டுவருகிறது. மாதம் இரு தடவை குழுக்கூட்டம் நடாத்தப்பட்டு அங்கத்தவரது பிரச்சினைக்கான தீர்வுகள் அவர்கள் மட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. அவர்கள் மட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் குழுத் தலைவிகளுக்கென பிரதேச மட்டத்தில் CDOs தலைமையில் நடாத்தப்படும் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டு அப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணிகள் மீது கவனம் செலுத்தி அதற்கான விழிப்புணர்வுகளும், தீர்வுகள் வழங்கப்படுகிறது.

எமது செயற்பாட்டில் வினைத்திறனையும், தரத்தினையும் பேணிக்கொள்வதற்காக இத்திட்ட செயற்பாட்டின் கீழ் ஒவ்வொரு பிரதேச மட்டத்திலும் மாதாந்தம் குழுக்கூட்டம், குழுத்தலைவிகளுக்கான கூட்டம், மாதாந்த கிளைக்கூட்டம், பிரதேச நிர்வாகக்கூட்டம் நடாத்தப்பட்டு செயற்பாடுகளை முன்கொண்டு செல்லும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும், நடவடிக்கைகளும் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



குழுக்கூட்டம்



குழுத்தலைவிகளுக்கான கூட்டம்



**மாதாந்த கிளைக்கூட்டம்**



**பிரதேச நிர்வாகக்கூட்டம்**

இதன் அடிப்படையில் இவ்வரையாண்டு காலப்பகுதியிலும் 6 பிரதேசத்திலும் 35 பிரதேச நிர்வாகக்கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் 1865 நிர்வாகிகள் கலந்துகொண்டுள்ளனர்.

| பிரதேசம் | நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண் | கலந்து கொண்டோர் |
|---|---|---|
| பொத்துவில் | 6 | 320 |
| திருக்கோவில் | 5 | 420 |
| காரைதீவு | 6 | 175 |
| கல்முனை | 6 | 326 |
| சம்மாந்துறை | 6 | 236 |
| நாவிதன்வெளி | 6 | 388 |
| மொத்தம். | **35** | **1865** |

- குழுக்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு புதிதாக தெரிவு செய்யப்பட்ட குழுத்தலைவிகளுக்கான கடமைகள் பொறுப்புக்கள் தொடர்பாக தெளிவுபடுத்தப்படவேண்டிய தேவையின் அடிப்படையில் ஒரு பிரதேசத்தில் இரு பயிற்சிகள் வீதம் 6 பிரதேசத்திலும் 12 பயிற்சிகள் இத்திட்ட உத்தியோகத்தர் திருமதி சுகிர்தினி கௌரிஸ்வரன் அவர்களினால் நடாத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சியில் 480 குழுத்தலைவிகள் கலந்துகொண்டு சுயசார்புக் குழுக்களின் நோக்கம், நிர்வாகத்தின் கடமைகள், பொறுப்புக்கள், சிறந்த குழுவினது பண்புகள், குழுக்கள் இணைந்து செயற்படக்கூடிய சமூக அபிவிருத்தி செயற்பாடுகள் போன்ற விடயங்கள் குறித்த தெளிவினைப் பெற்றுள்ளனர்.

- Diakonia அமைப்பின் நிதி உதவியுடன் வாழ்வாதார உதவித்திட்ட செயற்பாட்டின் கீழ் சிறியளவிலான வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைப் பயனாளிகளை ஊக்குவிக்கும் முகமாக 1000 பேருக்கு பயிர்விதைகள் வழங்குவதற்கான பயனாளித்தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- பெண்களின் உள்ளூர் உற்பத்திப்பொருட்களை ஊக்கப்படுத்தும் முகமாக இவ் உற்பத்திப் பொருட்களை பெரியளவில் காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ⚜ மாதிரிப் பயிர்ச்செய்கையினை ஊக்குவித்து மேம்படுத்தும் முகமாக காளான், பப்பாசி, வாழை, அன்னாசி போன்ற மாதிரி பண்ணைச்செய்கைக்கான பயனாளிகள் 10பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான நிதி உதவி வழங்குவதற்கான பயனாளிதெரிவுகள் நடைபெற்று வருகின்றன.

- ⚜ சூழல் பாதுகாப்பு செயற்பாட்டின் கீழ் கடதாசிப் பை தயாரிப்பதற்கு திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி, காரைதீவு ஆகிய பிரதேசங்களிலிருந்து 10 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு இவர்களுக்கான உதவு தொகையாக ஒருவருக்கு 5000.00 ரூபா வீதம் 10பேருக்கு 50,000.00 ரூபாய் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ⚜ சூழல் பாதுகாப்பு செயற்பாட்டின் கீழ் அமைப்பின் 6 பிரதேசங்களிலும் உள்ள குழுத் தலைவிகள் 240பேரை உள்ளிணைத்து வளவாளர் திரு.வ.பரமசிங்கம் அவர்களைக் கொண்டு அனர்த்த அபாயத் தனிப்பு தொடர்பாக 6 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.





- ⚜ சமூக விழிப்புணர்வு செயற்பாட்டின் கீழ் 6 பிரதேசத்திலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 240 சுயசார்புக்குழுத் தலைவிகளை உள்ளிணைத்து வளவாளர்.யோ.சுகேந்திரராஜா அவர்களைக் கொண்டு HIV/AIDS தொடர்பாக 6 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து அங்கத்தவர்களும் HIV/ AIDS பற்றி விழிப்புணர்வினைப் பெற்றுள்ளனர்.





## பிரதேச ரீதியான குழுச் செயற்பாடுகள்.

### பொத்துவில் பிரதேசம்.

☞ பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் 09 கிராமக் கிளைகளையும் 829 அங்கத்துவக் குடும்பங்களையும், 08 பணியாளர்களையும் கொண்டு பொத்துவில் பிரதேச காரியாலயம் தமது சேவையினை வழங்கிக்கொண்டு வருகின்றது.

☞ பொத்துவில் பிரதேச குழுச் செயற்பாடுகளாக பாடசாலை, பள்ளிவாசல், விகாரை மற்றும் ஆலயங்களில் சிரமதான நடவடிக்கைகளும், குழுச் சீட்டின் ஊடாக வீட்டுப் பொருட்கள் வாங்கிக்கொடுத்தலும், பயிர் நாற்றுக்கள் விற்பனை செய்தல், அவல், பற்போடி பைக்கற்பண்ணி விற்பனை செய்தல், பாய் இழைத்து விற்பனை செய்தல், காலை உணவு தாயாரித்து விற்பனை செய்தல், குழுக்களின் ஊடாக பயிர் விதைகள், பழமரக் கன்றுகளை வழங்குதல், மரண வீடுகளுக்கு உதவுதல், நோயாளிகளுக்கு உதவுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

☞ கிராமங்களில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள் மூலம் இலவச வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் வெளியில் கட்டம் செலுத்தி படிக்கமுடியாத வறிய மாணவர்கள் மிகவும் பயனடைந்து வருகின்றனர்.

### திருக்கோவில் பிரதேசம்.

☞ திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் 17 கிராமக் கிளைகளையும், 1973 அங்கத்துவக் குடும்பங்களையும், 19 பணியாளர்களையும் கொண்டு தமது விரிவான சேவையினை வழங்கிக் கெண்டு வருகிறது.

☞ திருக்கோவில் பிரதேச குழுச் செயற்பாடுகளாக குரக்கன் மா, சோளன் மா, சிலப்பு அவல், தலையணையுறை, அலங்காரப் பொருட்கள், கிழங்குவகை, கருவாடு, மிக்ஷர், தேங்காய் எண்ணெய், மரக்கறிவகை, தேங்காய், முட்டை, கொச்சி, கத்தரி போன்ற பயிர் நாற்றுக்கள் போன்ற பல உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு அவை மாதாந்தம் பிரதேசக்கூட்ட பெண்கள் சந்தையில் விற்பனை செய்து வருவாயினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

### காரைதீவுப் பிரதேசம்.

☞ காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் 05 கிராமக் கிளைகளையும், 560 அங்கத்துவக் குடும்பங்களையும், 05 பணியாளர்களையும் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

☞ காரைதீவுப் பிரதேசத்தின் கிளைச் செயற்பாடுகளாக பக்கோடா, பாக்கு சீவல் பொதி, தேங்காயெண்ணை, கடதாசி பை, இறுங்குப் பொரி, தலையணையுறை போன்ற உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு விற்பனை செய்து வருமானத்தைப் பெற்று வருவதுடன், குழுவாகச் சேர்ந்து சீட்டுப்பிடித்து வீட்டுப் பாவணைக்குத் தேவையான பொருட்களையும் கொள்வனவு செய்துள்ளனர். மற்றும் காரைதிவு

பிரதேச சண்முகா மகா வித்தியாலயம் , விக்னேஸ்வரா வித்தியாலயம் , பாலையடிப் பிள்ளையார், காரையடிப் பிள்ளையார் , கிறிஸ்தவ தேவாலயம் போன்ற இடங்களில் சிரமதானமும் செய்யப்பட்டுள்ளது.

## கல்முனைப் பிரதேசம்.

- கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவில் 09 கிராமக் கிளைகளையும், 1057 அங்கத்துவக் குடும்பங்களையும், 06 பணியாளர்களையும் உள்ளிணைத்து தமது சேவையினை வழங்கிக் கொண்டு வருகிறது.

- மனநல வைத்திய நிபுணர் திரு.யூடின் அவர்களைக்கொண்டு பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பாக கல்முனைப் பிரதேச அலுவலகத்தில் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கில் 26 பெண்கள் கலந்துகொண்டு வன்முறை தொடர்பாகவும், அதனைக் குறைப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் அறிவைப் பெற்றுள்ளனர்.

- NRC நிறுவன அனுசரணையுடன், சட்டத்தரணி முகிப் அவர்களைக் கொண்டு இளைஞர், யுவதிகளுக்கான சட்ட ஆலோசனைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் 35 இளையோர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

- இப்பிரதேச குழுச் செயற்பாடுகளாக சேனைக்குடியிருப்பு–02 கிளையிலுள்ள காமாட்சியம்மன் ஆலய வளாகமும், கணேஷா மகாவித்தியாலய பாடசாலை வளாகமும், கல்முனை-01 மணற்சேனை ஆலயம் ,குருந்தையடி ஐயனார் ஆலயத்திலும் சிரமதானப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சம்மாந்துறை பிரதேசம்.

- சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 06 கிராமக் கிளைகளையும், 771 அங்கத்துவக் குடும்பங்களையும், 06 பணியாளர்களையும் உள்ளிணைத்து தமது சேவையினை வழங்கிக் கொண்டு வருகிறது.

- இப்பிரதேச கிளைச் செயற்பாடுகளாக மட்தரவை – 01 கிளையில் 20.05.2011ம் திகதி 32பேரைக் கொண்டு பிரதேச சபை பொதுக்கட்டிடம் சிரமதானம் செய்து கொடுக்கப்பட்டதுடன், ஏனைய கிளைகளில் பாலர் பாடசாலை மற்றும் ஆலய சிரமதான நடவடிக்கைகளும், மெழுகு திரி உற்பத்தி செய்தும் வழங்கப்பட்டுள்ளது.

## நாவிதன்வெளிப் பிரதேசம்.

- நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் 11 கிராமக் கிளைகளையும், 1048 அங்கத்துவக் குடும்பங்களையும், 16 பணியாளர்களையும் கொண்டு சேவையினை வழங்கி வருகிறது.

- இப்பிரதேச குழுச் செயற்பாடுகளாக 08/05/2011ம் திகதியன்று வேப்பயடி அங்கத்தவா் 58 பேரைக் கொண்டு கண்ணகி அம்மன் ஆலய வளாகம்

சிரமதானம் செய்யப்பட்டுள்ளதுடன், குழுக்கள் ஒன்றிணைந்து வீட்டுத்தோட்டம் செய்தல், தேங்காயெண்ணை ஊற்றி விற்பனை செய்தல், குழுச் சீட்டுக்கள் மூலம் வீட்டுப் பாவனைக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொடுத்து தமது பொருளாதாரத்தில் மேம்பாடடைந்து வருகின்றனர்.

## குழுச் செயற்பாடு தொடர்பான புகைப்படங்கள்.



**அமைப்பின் உள்ளக ரீதியான செயற்பாடுகள்.**

- செயற்பாட்டு முன்னேற்றம் குறித்தும், செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினைகள், திட்டத்தின் பின்னடைவுகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் நோக்கில் அமைப்பினால் மாதாந்த மீளாய்வுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் இவ்வரையாண்டு காலப்பகுதியிலும் ...... மீளாய்வுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.





- ஒவ்வொரு திணைக்கள ரீதியாகவும் காணப்படும் பிரச்சினைகள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் வாரத்தில் 3நாட்கள் முகாமைத்துவசபை ஒன்றுகூடி பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றது. இதன் அடிப்படையில் இவ்வரையாண்டு காலப்பகுதியிலும் 03 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- இவ்வரையாண்டு காலப்பகுதியிலும் புதிதாக 08 பணியாளர்கள் பணியாளர் தெரிவுக்கேற்ப இணைத்துக்கொள்ளப் பட்டுள்ளதோடு, 03 பணியாளர்கள் பணியிலிருந்து விலகிக்கொண்டுள்ளனர்.